மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம் இக்குழு மே மாதம் மூன்றும் நான்காம் நாட்களில் சென்னைக்கு வருகை தந்தது.

(இ) அவை முன் ஒரு விவர அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் உரத் தொழிற்சாலை

* 202 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டத்தில் சிறிய அளவு உரத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் தனியார் துறையில் உரத் தொழிற்சாலை இருக்கிறது. அதுபோலவே அரசாங்கத் துறையில் அல்லது பொதுத் துறையில் அல்லது கூட்டுத் துறையில் ஒரு உரத் தொழிற்சாலை ஏற்பட்டால் அந்த வட்டார மக்களுக்குப் பயன்படும். ஆகவே, அப்படித் துவங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் துறையில் கோவை மாவட்டத்தில் ஐந்து இருக்கின்றன. அரசாங்கத்திலிருந்து ஆரம்பிக்க இப்போது தேவை இல்லை.

தூத்துக்குடி ரசாயன உரத்தொழிற்சாலை

* 203 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடி ரசாயன உரத் தொழிற்சாலையில் எப்போது உற்பத்தி துவங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திட்டப் பணி மதிப்பீடுகளின்படி 1974-ம் ஆண்டின் துவக்கத்தில் தூத்துக்குடி ரசாயன உர தொழிற்சாலையில் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி : 1974-ல் துவங்கும் என்று சொன்னார்கள். இவ்வளவு டன் உற்பத்தி செய்யும் என்ற முறையில் ஏதாவது திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அம்மோனியா 1100 டன், யூரியா 1600, என். பி. கே. 600, ஸல்ஃபூரிக் ஆசிட் 470, ஃபாஸ்பாரிக் ஆசிட் 165.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த உரத் தொழிற்சாலை பொதுத் துறையில்தானே அமைகிறது என்று அறிய விரும்புகிறேன்.

*94–95-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1971 ஜூலை 12]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, what is the percentage of demand from the agriculturists that it is meeting?

மாண்புமிகு திரு. செ மாதவன் : அதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. மணலி தொழிற்சாலை தொடங்குகிறது. அதற்குப் பின்னால் இது வரும்போது நம் தேவையை இது பெரும்பாலும் பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களது வேண்டுகோளுக்கிணங்க வினா எண். 204 ஒத்திவைக்கப்படுகிறது.

Licensed contractors of Electricity Board

*205. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state :—

(a) whether it is a fact that the Tamil Nadu Electricity Board had asked all the licensed contractors to surrender their licences by February 1970;

(b) whether fresh licences have been issued to all those who had surrendered their licences; and

(c) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) உரிமம் வழங்கு வாரியத்தின் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகள் 1969 ஜூலைத் திங்களில் அரசினால் ஏற்பளிக்கப்பட்டன. இந்த உரிமங்களை, திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகளின்கீழ் 28—2—1970-க்கு முன்னர் மாற்றிக்கொள்வதற்காக தங்கள் உரிமங்களைத் திருப்பிக் கொடுக்குமாறு முன்னர் சொல்லப்பட்ட விதிமுறைகளையொட்டி உரிமம் பெற்ற ஒப்பந்தக்காரர்கள் அனைவரையும் உரிமம் வழங்கும் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

(இ) & (உ) தற்போது வைத்திருக்கும் உரிமங்களைக் கொண்டு வந்து கொடுத்தவர்களும் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகளை நிறைவு செய்தவர்களுமான ஒப்பந்தக்காரர்கள் அனைவருக்கும் புதிய உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, have the Government proposed to nationalise all the private contracts and also if a private contractor had renewed his licence in 1970, how long his licence would be renewed?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது தேசியமயமாக்கும் முறை இல்லை. ஏற்கனவே 1965-ல் ஏ அண்ட் பி என்று இரு பிரிவுகள் அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்டன. பின்னர் அதில் சில சிக்கல்கள் இருப்பதாகக் கருதி மூன்றாகப் பிரித்தார்கள். பின்னர் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் கண்ட்ராக்டர்களும் விண்ணப்பித்ததன்படி அதுபற்றி ஆராய்ந்து இப்போது இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் தகுதி அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. எக்விப்மென்ட்ஸ் என்னென்ன வைத்திருக்கவேண்டும்,